**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 617/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **வேல்முருகன்** |
| Father's / Husband Name | : | அருணாசலம் |
| Address | : | மலையாளப்பட்டி, சின்னமுட்லு |
| Age | : | 47/2026 |

**தேதி : 25.03.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கவுண்டர்பாளையத்தில் உள்ள MKG கோழிப்பண்ணையில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 முதல் அ.சா.4 நபர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. முன்றாவது எதிரி செந்தில் ஓட்டுநர் அவரை மட்டும் எனக்கு தெரியும். எங்கள் கோழிப்பண்ணையில் செந்தில் ட்ரைவர் வாரத்திற்கு இரண்டுமுறை வந்து முட்டைகளை வாங்கிசெல்வார். அதற்கான பணத்தை ஓனருக்கு பாதி பணத்தை கொடுப்பார்கள், பாதி பணத்தை வங்கியில் செலுத்துவதாக செல்வார்கள். அ.சா. 1 கோவிந்தராஜ் அவர்களின் வங்கி கணக்கை சரிபார்க்கும்போது அதில் முட்டை வாங்கிய பணம் கொடுத்ததாக இல்லை. முட்டை வாங்கி சென்ற நபரிடம் பணம் வரவில்லை என்று எங்கள் ஓனர் அ.சா. 1 கோவிந்தராஜ் கேட்டார். பிறகு பணம் தருவதாக முட்டை வாங்கி சென்றவர்கள் சொன்னார்கள்.

ஆனால் முட்டை வாங்கிசென்றவர்கள் பணத்தை கொடுக்கவில்லை. அ.சா. 1 கோவிந்தராஜ் எதிரிகளின் மீது பணம் கொடுக்கவில்லை என்று பெரம்பலூர் DCB போலீஸில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் M.A., B.Ed., படித்துள்ளேன். என்னுடைய மனைவி நான் வேலை செய்யும் இடத்தில்தான் அவர்களும் வேலை செய்துவருகிறார்கள். நான் கோழிப்பண்ணையில் என்னென்ன வேலை செய்வேன் என்றால் கோழிப்பண்ணையில் முட்டைகளை எடுத்து வைப்பேன், கோழிகளுக்கு தீவனம் வைப்பேன், லாரிகளில் விற்பனைக்காக முட்டைகளை எண்ணி அனுப்பிவைப்பேன். முட்டைகளை ஏற்றுவதற்கு என்ன வண்டி வந்தது என்றால் சக்தி வண்டி வந்தது. அதில் ட்ரைவர் செந்தில் என்பவர் வருவார். அந்த வண்டியில் எத்தனை பேர் வருவார்கள் என்றால் ட்ரைவருடன் லோடு மேனாக மூன்று நபர்கள் வருவார்கள் மற்றும் இரண்டு நபர்கள் வருவார்கள்.

வங்கியில் பணம் வரவில்லை என்ற விவரம் எப்போது உங்களுக்கு தெரியும் என்றால் 2023ம் ஆண்டு, 6வது மாதம் எனக்கு தெரியும். யார் மூலமாக எனக்கு விவரம் தெரியும் என்றால் கோழிப்பண்ணை ஓனர் கோவிந்தராஜ்(அ.சா.1) தனபாக்கியம் (அ.சா.2) மூலமாக தெரியும். எதிரிகள் முட்டை வாங்கியதற்காக கையில் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எவ்வளவு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. பணம் கொடுக்கல், வாங்கல் உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஓட்டுநர் செந்தில் சொல்லித்தான் எனக்கு தெரியும். அ.சா. 1 கோவிந்தராஜ் கோழிப்பண்ணையில் நீங்கள் வேலையே பார்க்கவில்லைஎ ன்றாலும், அ.சா.1 கோவிந்தராஜ் உங்கள் உறவுக்காரர் என்பதாலும், அ.சா. 1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1க்கும், எதிரிகளுக்கும், கொடுக்கல், வாங்கல் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

அ.சா. 4 மோத்தீஸ்வரன் உங்கள் உறவினர் என்றால்  உறவினர் இல்லை. அ.சா. 4 கவுண்டபாளையம், மலையாளப்பட்டியை சேர்ந்தவர் என்றால் இல்லை, அவர் அரும்பாவூரை சேர்ந்தவர்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.